**KSL Media Limited**
CIN : U22222TN2013PLC092078

இந்து தமிழ் திசை

பெறுநர் :
திரு.கல்வித்துறை ஆணையர் அவர்கள்,
பள்ளி கல்வித்துறை அலுவலகம்
சென்னை .

சென்னை
08-09-2021

**பொருள் : மகாகவி பாரதியாரின் நினைவு நூற்றாண்டை (செப்.11) போற்றும் வகையில் 'இந்து தமிழ் திசை' நாளிதழ் நடத்தும் பள்ளி மாணவர்களுக்கான கவிதைப் போட்டி**

சென்னை இந்திய தேச விடுதலைக்கென எழுச்சிமிக்க பாடல்களை எழுதிய மகாகவி பாரதியாரின் நினைவு நூற்றாண்டு தினத்தினைக் கொண்டாடும் வகையில் 'இந்து தமிழ் திசை; **நாளிதழ் பள்ளி மாணவர்களுக்கான கவிதைப் போட்டி ஒன்றினை நடத்துகிறது.**

'தேசிய கவி' என்று அனைவராலும் பாராட்டப்பெற்ற மகாகவி பாரதியார், இந்திய தேசத்தின் விடுதலைக்காகவும், மக்கள் அனைவரும் ஒற்றுமையோடும் சகோதரத்துவத்துடனும் சமத்துவமாக வாழ வேண்டுமென்கிற எண்ணத்தோடும் உணர்ச்சி கொப்பளிக்கும் கவிதைகளை இயற்றிய பெருமைக்குரியவர். அவரது நினைவு நூற்றாண்டு தினம் வரும் 2021 செப்டம்பர் 11 அன்று கொண்டாடப்படவுள்ளது. அதனையொட்டி, மாணவ-மாணவிகளுக்கான கவிதைப்போட்டி ஒன்றினை **'இந்து தமிழ் திசை' நாளிதழ்** நடத்துகிறது. இப்போட்டியில், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த 9 முதல் 12-ம் வகுப்பு வரை படிக்கும் மாணவ-மாணவிகள் அனைவரும் கலந்துகொள்ளலாம்.

மகாகவி பாரதியாரின் நினைவு நூற்றாண்டு தினத்தையொட்டி 2021 **செப்டம்பர் 10 (வெள்ளிக்கிழமை) அன்று 'இந்து தமிழ் திசை' நாளிதழில் இந்தக் கவிதைப் போட்டிக்கான நுழைவுப் படிவம்** வெளியாகும். அந்த நுழைவுப் படிவத்தைப் பூர்த்தி செய்து, **'எங்கள் பாரத தேசம் என்று தோள் கொட்டுவோம்!' என்று பாடிய மகாகவி பாரதியின் கனவை நிறைவேற்றும் எண்ணத்துடனும்,** இந்திய தேசத்தை உலக அரங்கில் மேலும் முன்னேற்றும் உத்வேகத்துடனும் 20 வரிகளுக்கு மிகாமல் அந்தப் பக்கத்திலேயே மாணவர்கள் தங்களின் கவிதையை எழுத வேண்டும். அதை அப்படியே கத்தரித்து, 'இந்து தமிழ் திசை' சென்னை அலுவலக முகவரிக்கோ அல்லது அந்தப் பக்கத்தை ஸ்கேன் செய்து, **hindutamilthisaievents@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ வரும் செப்டம்பர்-20-ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும்.

மகாத்மா காந்தியின் பிறந்த நாளும், கர்மவீரர் காமராசரின் நினைவு நாளுமான அக்டோபர் – 2-ஆம் தேதி கவிதைப் போட்டியின் முடிவுகள் வெளியாகும்.

- தங்கள் அன்பான,

**(இந்து தமிழ் திசை-நாளிதழுக்காக),**

End.R.C.No: 047819/ M/ S1 / 2021,     நாள்: 09 .09.2021

(நகல்) மேற்காணும் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு அனைத்து வகைப் பள்ளி மாணவ மாணவியர்களும் தன்னார்வமாக இப்போட்டியில் கலந்துகொள்ள தகவல் தெரிவிக்கும் பொருட்டு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பிவைக்கப்படுகிறது.

இணை இயக்குநர்
(நாட்டு நலப்பணித் திட்டம்)

பெறுநர்

1. அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்

2. அனைத்து மாவட்ட கல்வி அலுவலர்கள்

9/9/21